'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் :XVII **அக்டோபர் கி.பி. 2026** சான்று : 202



# புதிய பணியாளர்கள் பயிற்சி



**பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணிக் குடும்பமே,**

கடவுள் செய்யும் ஒவ்வொன்றும் எப்போதும் நிலைத்திருக்கும் என்பதை நான் அறிவேன். அதனோடு கூட்டுவதற்கோ அதனின்று குறைப்பதற்கோ எதுவுமில்லை. தமக்கு மனிதர் அஞ்சி நடக்க வேண்டுமென்று கடவுள் எல்லாவற்றையும் செய்திருக்கிறார் (சஉ 3:14). கடவுள் தனது உடன்படிக்கையில் நிலைத்திருக்கிறார். நாம் கொடுத்த அர்ப்பணத்தில் நிலைத்திருப்பதுதான், அவருக்கு அஞ்சி நடப்பதாகும். ஞானம் மனிதர் நடுவில் முடிவில்லாத அடித்தளத்தை அமைத்துள்ளது. அவர்களுடைய வழி மரபினரிடையே நீங்காது நிலைத்திருக்கும் (சீஞா 1:15). என் அன்பில் நிலைத்திருங்கள் (யோவா 15:9) என்று கூறுகிற இயேசு ஆண்டவர், நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைபிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பது போல நீங்களும் என் கட்டளைகளைக் கடைபிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள் (யோவா 15:10)என்று கூறுகிறார். அவர் அன்பில் நிலைத்திருந்தால் நாம் கொடுத்த அர்ப்பணத்திலும் நிலைத்திருப்போம் என்று கூறி உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன், செபிக்கிறேன்.

சென்ற இதழில் அர்ப்பணத்தில் நிலைத்திருப்பதற்கான வழிமுறைகளை தியானிக்க தொடங்கினோம். தொடர்ந்து தியானிப்போம். ஒவ்வொருவரும் எந்நிலையில் அழைக்கப்பட்டார்களோ அந்நிலையிலேயே நிலைத்திருக்கட்டும்(1கொரி 7:20,24)என்று புனித பவுலடியார் அறிவுறுத்தியுள்ளார். எனவே நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிற வழிமுறைகளை உள்வாங்கி அர்ப்பணத்தில் நிலைத்திருக்க தொடர்ந்து முயற்சி செய்வோம்.

**5. சிறிய காரியங்களில் உண்மையாக**

நாம் ஐந்து கடமைகளில் உண்மையாக இருக்க வேண்டும். நாம் செய்கிற ஒவ்வொரு சிறு செயல்களிலும் உண்மையாக இருக்க வேண்டும். நாம் மனிதருக்கு உகந்தவர்களாய், அவர்களின் நல்லெண்ணத்திற்காக வாழ்பவர்களாய் இருந்தால் கடவுளுக்கு உகந்தவர்களாய் இருக்க முடியாது (கலா 1:10). எதைச் சொன்னாலும் எதை செய்தாலும் அனைத்தையும் ஆண்டவர் இயேசுவின் பெயரால் செய்து அவர் வழியாய் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்(கொலோ 3:17)என்று புனித பவுலடியார் தெளிவாகக் கூறுகிறார். அதுமட்டுமல்ல, நீங்கள் உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் கடவுளுடைய மாட்சிக்காகவே செய்யுங்கள் (1கொரி 10:31)என்று அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து எதை செய்தாலும், அது மிக மிகச் சிறிய செயலாக இருந்தாலும், அதைக் கடவுளுக்கு உகந்ததாய், அவரது மாட்சிக்காக செய்யும்போது நாம் நிச்சயம் நமது அர்ப்பணத்தில் நிலைத்திருப்போம். மிக சிறியவற்றில் நம்பத் தகுந்தவர் பெரியவற்றிலும் நம்பத் தகுந்தவராய் இருப்பார் (லூக் 16:10)என்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து உறுதிபடச் சொல்லுகிறார். எனவே சிறிய செயல்களில் கூட உண்மையாக இருந்து நமது அர்ப்பணத்தில் நிலைத்திருப்போம்.

**6. துன்பங்களை ஏற்றல்**

இயேசு கிறிஸ்து ஆண்டவர் பாடுகள், சிலுவை மரணம் உண்டென்று அறிந்திருந்தாலும், தமது அர்ப்பணத்தில் இறுதிவரை நிலைத்திருந்தார். ஏனெனில் துன்பங்கள் என்பது அர்ப்பணத்தின் முக்கியமான பகுதியாக இருந்தது. நாம் சிலுவைக்கு விழா எடுப்போம். சிலுவையை முத்தி செய்வோம். சிலுவை என்பது ஒரு அடையாளமே. சிலுவை வழிதான் மீட்பு என்றும் நமக்கு தெரியும். சிலுவையை அன்பு செய்து முத்தி செய்கிற நாம் நமக்குக் கடவுள் கொடுத்திருக்கிற, அனுமதித்திருக்கிற துன்பத்தை முத்தி செய்வோமா? அதை பல புனிதர்கள் நேசித்தது போல நாம் நேசிப்போமா? துன்பமே எனது மணப்பெண் என்ற புனித இஞ்ஞாசியாரைப் போல நம்மால் சொல்ல முடியுமா? அர்ப்பண வாழ்க்கையில் துன்பங்கள் வருவது

இயற்கையான, இயல்பான ஒன்று. அந்தத் துன்பங்களை, நம் அன்றாட சிலுவைகளைத் தழுவிக்கொள்ளக் கூடிய மனம் வேண்டும். என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னை பின்பற்றட்டும் (லூக்9:23, மத்10:38, மத்16:24, மாற்8:34) என்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தெளிவாக, உறுதிபடக் கூறி இருக்கிறார். தம் துன்பங்களை முணுமுணுப்பின்றி, முறுமுறுப்பின்றி, விரும்பி சுமக்காதவர்கள் அர்ப்பணத்தில் சீடராக நிலைத்திருக்க முடியாது(லூக் 14:27)என்றும் தெளிவாகக் கூறியிருக்கிறார். அவர் தாம் அடையவிருந்த மகிழ்ச்சியின் பொருட்டு, இழிவையும் பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக் கொண்டார் (எபி 12:2). எனவே நாம் அர்ப்பணத்தில் நிலைத்திருக்க சிலுவையை, துன்பங்களை தாங்கிக் கொள்வோம். அதை அன்பு செய்வோம்.

### 7. மன்னிப்பையும் தாழ்மையையும் கற்றுக்கொள்ளல்

பல நேரங்களில் நம் அர்ப்பணத்தில் நிலைத்திருக்க முடியாமல் போனதற்கு மிக முக்கியமான காரணம் வெளிப்புறத் துன்பங்களை விட மனித உறவுகளால் ஏற்படும் காயங்களே ஆகும். எனவே, குறைகளை மனதில் சேமித்து வைக்காமல் மன்னிக்கவும், தாழ்மையுடன் திருத்தப்படுவதை ஏற்றுக் கொள்வதிலும் நமது அர்ப்பணம் நிலைபெறுகிறது. மேலும், ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ளுங்கள். ஒருவரைப் பற்றி ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் மன்னியுங்கள். ஆண்டவர் உங்களை மன்னித்தது போல நீங்களும் மன்னிக்க வேண்டும் (கொலோ 3:13) என்ற வார்த்தையை நமதாக்கிக் கொள்ளும் போது நாம் உறுதியாக அர்ப்பணத்தில் நிலைத்திருப்போம். கனிவு, தாழ்மை ஆகியவற்றை கடவுளோடு ஒன்றிப்பில், தனி செபத்தில் வாழும் போது எளிதாக பெற்றுவிடலாம்(மத்11:29). இயேசுவைவிட இவைகளை வாழ்ந்தவர் எவரும் உண்டோ? (பிலி 2:6-11).

### 8. பணியாளர் இயக்கச் செயல்பாடுகளில் பங்கேற்றல்

நற்செய்தி பணியாளர் கடமைகள், சிறப்பு நிகழ்வுகளான கூடுகைகள், மாநாடுகள், ஆவியானவர் பெருவிழா போன்ற நிகழ்வுகள், அருளமுது ஆதார குழு கூடுகைகள், செய்தி அளித்தல் அம்புரோஸ் அறக்கட்டளைக்கு உதவுதல், அர்ப்பண விழாக்கள் போன்றவைகளில் இயக்கத்தோடு இணைந்து பயணித்தல் அர்ப்பணத்தில் நிலைத்திருக்க பெரிதும் உதவும்.

### 9. ஆன்மீக வழிகாட்டுதல்களைப் பெறல்

தனியாக எல்லாவற்றையும் செய்ய முயற்சிக்காமல் நம்பகமான, உண்மையாக சீடராக வாழ்பவர்களிடத்தில் மனதைத் திறந்து பகிர்வது மிகவும் உதவும். அவர்களிடம் ஆலோசனை கேட்பது நல்ல பயன் தரும். பொது நிலையினர், இருபால் அருள்பணியாளர்களில் சான்று வாழ்க்கை வாழ்பவர்களிடம் ஆலோசனை பெறலாம். நான் இந்த வழிமுறைகளை பின்பற்றுகிறேன். பல்வேறு ஆன்மீக நூல்களில் இருந்தும் பல்வேறு வழிமுறைகளைப் பெறலாம்.

### 10. கடவுளின் அருளை நம்புதல்

இறுதியாக, உறுதியாக இந்த கருத்தை எல்லாரும் உள்ளத்திலும் அழுத்தமாக, ஆணித்தரமாக பதிவு செய்ய விரும்புகிறேன். நான் எப்படியாவது நிலைத்திருப்பேன் என்பதற்குப் பதிலாக 'ஆண்டவரே, நான் பலவீனமானவன். நீர் எனக்கு அருள் தாரும். நான் உம்மில் நிலைத்திருக்க உதவும்' என்று ஆழ்ந்த நம்பிக்கையோடு தினமும் செபிக்க வேண்டும். நான் உங்களோடு இணைந்து இருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள்(யோவா 15:4)என்ற இயேசு கிறிஸ்து ஆண்டவரின் கட்டளையை, ஆலோசனையை உறுதியாக பின்பற்றினால் நாம் அர்ப்பணத்தில் உறுதியாக நிலைத்திருப்போம். எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு(பிலி 4:13)என்ற வார்த்தையில்

நம்பிக்கை கொண்டு இறையருளுக்கு முக்கியத்துவம் அளிப்போம். இறுதிவரை மன உறுதியுடன் இருப்பவரை மீட்பு பெறுவர்(மத் 24:13) அனைவரும் அர்ப்பணத்தில் நிலைத்திருக்க ஒருவர் மற்றவருக்காய் செபிப்போம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

## செப்டம்பர் 2026 புதிய பணியாளர்கள் பயிற்சி

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 6.09.2026 அன்று நடைபெற்றது. 7 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி M. அருள்மரியநாயகம், நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - II காளையார்கோவில், தந்தை. ஜோசப் சேவியர் அரங்கில் 6.09.2026 அன்று நடைபெற்றது. 18 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி V. செங்கோல்மேரி, நற்பணி. C. பிரான்சிஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 12.09.2026 அன்று நடைபெற்றது. 17 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி X. லூர்துமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - IV சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 13.09.2026 அன்று நடைபெற்றது. 12 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி M. சகாயமேரி, நற்பணி V. யூஜின் அமல்ராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - V ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 13.09.2026 அன்று நடைபெற்றது. 3 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A. ஜான்சிமேரி, நற்பணி A. ஆரோக்கியமேரி, நற்பணி இரா. அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VI அமைதியகம், காயாவயலில் 20.09.2026 அன்று நடைபெற்றது. 16 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி J. அருள் இளங்கோ, நற்பணி S. பால்ராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VII சி.கே. மங்கலம், புனித பேதுரு கோவிலில் 20.09.2026 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி A. தமிழ் செல்வி, நற்பணி A. ஜான்சிமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 20.09.2026 அன்று நடைபெற்றது. 20 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி G.M.S ராணி, நற்பணி T. ஸ்டீபன், நற்பணி J. சார்லஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IX இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் கோவிலில் 20.09.2026 அன்று நடைபெற்றது. 3 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி A. ஆரோக்கியமேரி, நற்பணி S. தைனஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

✸02.09. 2026 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக்குழு கூடுகை நடைபெற்றது. 38 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி M. விசுவாசம், நற்பணி A. சகாய தமிழ் செல்வி, நற்பணி B. ஸ்டெல்லாமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

✸02.09.2026 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் குழு கூடுகை நடைபெற்றது. 70 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி ஜோசப் சேவியர், நற்பணி அந்தோணிராஜ், நற்பணி ஜெனிபர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

✸06.09. 2026 அன்று தமிழக நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு நடத்திய மறைபரப்பு ஞாயிறு நூற்றாண்டு விழா சிறப்புக் கூடுகை திருச்சி அருங்கொடை மையத்தில் நடைபெற்றது. இதில் 185 பணியாளர்கள் பேர் கலந்து கொண்டார்கள்.

✸12&13.09.2026 ஆகிய நாள்களில் திருமயத்தில் தெளிந்து தேர்தல் தியானம் நடைபெற்றது. இத்தியானத்தை நற்பணி மரிய கிரகோரி, நற்பணி ஜெனிபர், நற்பணி செபஸ்தியான் மற்றும் செயலர் வழிநடத்தினார்கள்.

✸12.09. 2026 அன்று மாந்தை திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. மோட்சஅலங்காரம், நற்பணி. S. அந்தோனி பிரகாஷ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸13.09. 2026 அன்று தரங்கம்பாடி புனித ஜெபமாலை அன்னை கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. மோட்சஅலங்காரம், நற்பணி S. அந்தோனி பிரகாஷ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸13.09.2026 அன்று மணல்மேல்குடி புனித ஆரோக்கிய மாதா கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி M. விசுவாசம், நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸13.09. 2026 அன்று கோட்டைக்காடு, புதுக்கோட்டை, பூதலூர், பட்டுக்கோட்டை, அம்மாபேட்டை, திருவாரூர், நமணசமுத்திரம் பணியாளர்களுக்கு சிறப்பு பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சிகளை சிவகங்கை மறைமாவட்ட பணியாளர்கள் வழங்கினார்கள்.

✸19.09. 2026 அன்று தஞ்சை, அண்ணாநகர் புனித செபஸ்தியார் கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி L. ஆரோக்கியசாமி, நற்பணி ஜெயசீலி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸19.09.2026 அன்று தஞ்சை, மங்களபுரம் புனித லூர்து அன்னை கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. மோட்சஅலங்காரம், நற்பணி I. செபஸ்தியான் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸20.09.2026 அன்று மன்னார்குடி புனித சூசையப்பர் கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. மோட்சஅலங்காரம், நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸20.09.2026 அன்று தஞ்சாவூர், திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி P. சகாயராணி, நற்பணி தை. அமல்ராஜ் அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

✸20.09.2026 அன்று மாந்தை திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி. நற்பணி. தை. அமல்ராஜ், நற்பணி. M.லூயிஜான் போஸ்கோ ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸20.09.2026 அன்று அறந்தாங்கி, கிறிஸ்து அரசர் கோவிலில் புதிய

பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை செயலர், நற்பணி A.R. சூசைராஜ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱25&26.09.2026 ஆகிய நாள்களில் அர்ப்பணம் ஏற்போருக்கு தெளிந்து தேர்தல் தியானம் அருள்சான்று நிலையத்தில் நடைபெற்றது. இத்தியானத்தில் 62 பேர் கலந்துகொண்டார்கள்.

✱26.09.2026 அன்று நாகபட்டிணம், புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S.மோட்ச அலங்காரம், நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱27.09. 2026 அன்று முத்துப்பேட்டையில் மேதகு ஆயர் ஆனந்தம் தலைமையில் வட்டார அதிபர் அருள்பணி, சிங்கராயர், பணிக்குழுக்களின் ஒருங்கிணைபாளர் அருள்பணி. செபாஸ்டின் ஆகியோர் முன்னிலையில் அர்ப்பணவிழா நடைபெற்றது. 62பேர் தங்களை சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளராக அர்ப்பணித்தனர். முத்துப்பேட்டைபங்குப்பணியாளர் சவரிமுத்து அவர்களுடன் இணைந்து முத்துப்பேட்டை வட்டாரப் பணியாளர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்தனர்.

✱27.09.2026 அன்று எருக்கூர், புனித சிந்தாத்திரிமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி. S. அந்தோனி பிரகாஷ், நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱27.09.2026 அன்று சீர்காழி, புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி J. அருள் இளங்கோ, நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱27.09.2026 அன்று மயிலாடுதுறை, புனிதசவேரியார் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S.மோட்ச அலங்காரம், நற்பணி A.R. சூசைராஜ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.



# தனி செபம்

நற்செய்திப் பணியாளர்களின் வாழ்வும் சீடத்துவமும் வளம் பெறவும். மிளிரவும் தனிசெபம்இன்றியமையாததது எப்படி? ஏன் தனி செபம்?.

- **மறைவாக செபிக்க வேண்டும்:** நீயோ செபிக்கும்போது உன் அறைக்குள் சென்று கதவை அடைத்துக்கொண்டு, மறைவில் உள்ள உன் தந்தையை நோக்கி செபி (மத் 6:6). இறைவனோடு தனிப்பட்ட உறவை வளர்த்துக்கொள்ள தனி செபம் எவ்வளவு முக்கியமானது என்பதை இயேசு கூறுகிறார்.
- **இயேசு தனிமையில் செபித்தார்:** ஆனால் அவர் தனிமையான இடங்களுக்குச் சென்று, அங்கே செபித்துக் கொண்டிருந்தார். (லூக் 5:16) இயேசுவின் வாழ்க்கையிலே தனி செபம் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது. ஆகவே அவரைப் பின்பற்றும் நாமும் தனியாக செபிக்க வேண்டும்.
- **சோதனையை வெல்ல:** விழிப்பாறிருந்து இறைவனிடம் வேண்டுங்கள்: நீங்கள் சோதனைக்கு உள்ளாகாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள் (மத் 26:41). தனி செபம் நமது ஆன்மீக வாழ்க்கையை விழிப்புடன்' வைத்திருந்து சோதனைகளை மேற்கொள்ள உதவுகிறது.
- **கவலைகளிலிருந்து விடுபட:** எதற்கும் கவலைப்படாதீர்கள். மாறாக, எல்லாச் சூழ்நிலைவகளிலும் இறைவனிடம் வேண்டுதலையும் மன்றாட்டையும் நன்றியோடு எடுத்துரையுங்கள். (பிலி: 4:6) செபத்தில் நமது பயம். கவலை பிரச்சனைகள் அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்து அவைகளிலிருந்து விடுபட முடியும்.

- **இறைவார்த்தை செபம்:** உமது வாக்கு என் காலடிக்கு விளக்கு: என்பாதைக்கு ஒளி. (திபா 119:105) தன செபத்தடன் இறைவார்த்தையை வாசித்து தியானிக்கும்போது. நமது வாழ்க்கையில் இறைவனின் வழிகாட்டுதலைப் பெற முடியும்.
- **இடைவிடாமல் செபம்:** இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள். (1 தெச 5:17). செபம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் செய்யும் செயல் அல்ல. நமது வாழ்வின் அங்கமாக, வாழ்வாக மாற வேண்டும்.

நற்பணி **அமல்ராஜ்**



## ஆடுகளுக்கு வாயில் நானே

நலம் பெற விரும்புகிறீரா? என்று அவரிடம் கேட்டார் (யோவா 5:6).
பெரிய நிலச்சரிவில் சிக்கி அநேகர் காணாமல் போய் விட்டார். மீட்புப் படையினர் இரவும் பகலும் இவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒலி பெருக்கியை கையில் வைத்துக் கொண்டு யாராவது இருக்கிறீர்களா? என்று கேட்டபோது பாறை இடுக்குகளில் முனகல் சத்தம் கேட்கிறது. அருகில் சென்றபோது கால் எலும்புகளெல்லாம் நொறுங்கிய நிலையில் இருந்த ஒரு மனிதரைக் கண்டு பிடித்து தூக்கி வருகிறார்கள். ஒரு மனிதர் இன்னொரு மனிதரைப் பார்த்து நலமாக இருக்கிறீர்களா? என்றுதான் கேட்க முடியும். மனிதனால் இயன்றது அவ்வளவுதான்: ஆனால் நம் ஆண்டவர் முப்பத்தெட்டு ஆண்டுகளாக உடல் நலம் இல்லாத ஒரு மனிதரைப் பார்த்து நலம்பெற விரும்புகிறீரா? என்று கேட்டார் (யோவா 5:5-6). ஏனெனில் நம் ஆண்டவர். நம்மை குணமாக்கும் ஆண்டவர். நம் கடவுளாகிய ஆண்டவருக்கு பல பெயர்கள் உள்ளன. அதில் ஒன்று நானே உங்களை குணமாக்கும் ஆண்டவர் என்பதாகும் (விப 15:26). இஸ்ரயேல் மக்களைப் பார்த்து நான் எகிப்திற்கு வரச் செய்த கொள்ளை நோய்களை உன்மேல் வரவிட மாட்டேன். ஏனெனில் நானே உன்னைக் குணமாக்கும் ஆண்டவர் என்று வாக்களித்தார் (விப 15:26). புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழும் நம்மை எப்படி அவர் குணமாக்குகிறார். தம் வார்த்தையை அவர் அனுப்பி அவர்களை குணபடுத்தினார் (திபா 107:20). நம் ஆண்டவர் தொடக்கத்தில் வார்த்தையாக இருந்தவர் நம்மை குணமாக்கும்படி இவ்வுலகில் வந்தார். (யோவா 1:14. ) நாம் எப்படி குணமாவது? மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார், நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார் என்றும் அவர் தம் காயங்களால் நாம் குணமடைகிறோம் என்றும் ஏசாயா குறிப்பிடுகிறார் (எசா :53:4-5). இது அவர் உலகில் வருவதற்கு 800 ஆண்டுகளுக்கு முன் அவரைப்பற்றிய இறைவாக்குப் பகுதி இதை உறுதிபடுத்தும்படி புனித பேதுரு சிலுவையின் மீது நம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார்; அவர்தம் காயங்களால் நீங்கள் குணமடைந்துள்ளீர்கள் என்கிறார் (1 பேது 2:24). தாவீது கூறுவதைக் கவனிப்போம்: அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கிறார்; உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார் (திபா 103:3). தந்தையாம் கடவுள் மனிதனைப் படைக்கும்போது நோய் இல்லாத மனிதனாகத்தான் படைத்தார். மனிதன் பாவத்தில் விழுந்தபோதுதான், நோய், துன்பம், வறுமை எல்லாம் சேர்ந்து மனிதனை நிலை தடுமாறச் செய்தது. இவை அனைத்துக்கும் அலகைதான் காரணம்: எனவேதான் பாவம் செய்கிறவர் அலகையைச் சார்ந்தவர்.

ஏனெனில், தொடக்கத்திலிருந்தே அலகை பாவம் செய்து வருகிறது. ஆகவே அலகையின் செயல்களைத் தொலைக்கவே இறைமகன் தோன்றினார் என்று யோவான் குறிப்பிடுகிறார் (1யோவா 3:8). எனவேதான் முடக்குவாதமுற்ற ஒரு மனிதரை நான்குபேர் சுமந்து கொண்டு வந்து ஆண்டவருக்கு முன் கட்டிலோடு இறக்கினார்கள். அந்த மனிதரை சுமந்து வந்த மனிதர்களின் நம்பிக்கையைக் கண்ட ஆண்டவர் முடக்குவாதமுற்ற மனிதரைப் பார்த்து 'மகனே' என்று அழைத்து உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்றார். அங்கே அமர்ந்திருந்த மறைநூல் அறிஞர்கள் இதைக் கேட்டு இவன் கடவுளைப் பழிக்கிறான் என்றனர் (மாற்கு 2:6).

ஆண்டவரைப் பார்த்து இப்படி கேட்டவர்கள் சாதாரண மக்கள் அல்ல. அவர்கள் திருச்சட்டம் படித்த மறைநூல் அறிஞர்கள். மேலும் பாவங்களை மன்னிக்க யாரால் இயலும்? என்று கேட்டார்கள். ஆண்டவர் அவர்களைப் பார்த்து மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று கூறிவிட்டு பாவங்கள் மன்னிக்கப்பட்ட முடக்குவாதமுற்றவரைப் பார்த்து எல்லார் முன்பாக நான் உனக்குச் சொல்கிறேன் நீ எழுந்து உன்னுடைய படுக்கையை எடுத்துக் கொண்டு உன்னுடைய வீட்டிற்குப்போ என்றார். அவரும் தன்னுடைய படுக்கையை எடுத்துக் கொண்டு எல்லாரும் காண வெளியே சென்றார். அங்கு இருந்த அனைவரும் மலைத்துப்போய் இதைப்போல நாம் ஒருபோதும் கண்டதில்லையே என்று கூறிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார்கள் (மாற் 2:3-12). இன்றைக்கும் நம் ஆண்டவர் நம் பாவங்களை மன்னிப்பவராக மட்டுமல்ல நம் நோய்களை குணமாக்குபவராகவும் நம்மோடு இருக்கிறார். அவரது வார்த்தையின் மீது நம்பிக்கை வைத்து நோயுள்ள இடத்தில் நம் கைகளை வைத்து ஆண்டவர் இயேசுவின் பெயரால் அவரது தழும்புகளால் இந்த வலி மறையட்டும் என்று கூறிவிட்டு பின்பு ஆண்டவரே உம் தழும்புகளால் இந்த வேதனை நீங்கியதற்காக உமக்கு நன்றி என்று சொல்லும்போது நாம் அவரது வார்த்தையின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை உறுதிபடுத்துகிறோம். நாம் நன்றி சொல்லும்போது ஆண்டவர் மகிழ்கிறார். அன்று பத்து தொழு நோயாளர்களை ஆண்டவர் குணமாக்கினார். ஆனால் அதில் ஒருவர் மட்டுமே திரும்பி வந்து ஆண்டவர் பாதத்தில் முகம் குப்புற விழுந்து அவருக்கு நன்றி செலுத்தினார். ஆண்டவர் அவரைப் பார்த்து மற்ற எவருடைய நோயும் நீங்கவில்லையா? மற்ற ஒன்பது பேர் எங்கே? கடவுளைப் போற்றிப் புகழ அன்னியராகிய உம்மைத் தவிர வேறு எவரும் திரும்பி வரக்காணோமே என்று ஆவலோடு கேட்டார் (லூக் 17:11-19). கடவுளுக்கு நன்றி சொன்ன மனிதர் ஒரு அன்னியர். ஆனால் நாங்கள் ஆபிரகாமின் வழி மரபினர் என்று பெருமையாக பேசியவர்கள் கடவுளுக்கு நன்றி சொல்ல வரவில்லை; இன்றைக்கும் நம் ஒவ்வொருவருக்கும் அருகில் நம்மை குணமாக்கும் ஆண்டவர் நம்மோடு இருக்கிறார் என்பதை நம்புவோம். அவர் நமக்கு வாக்களித்துள்ள வார்த்தைகள் மீது நம்பிக்கை வைத்து அவைகளை அறிக்கை செய்து நோய்களுக்கெல்லாம் காரணமாய் இருக்கின்ற அலகையின் செயல்களை முறியடிப்போம்.

நற்பணி M. **விசுவாசம்**

# தீமைக்கு நன்மை செய்

அன்பார்ந்தவர்களே! தீமை செய்து பழிவாங்காதீர்கள். அதைக் கடவுளின் சினத்திற்கு விட்டுவிடுங்கள். ஏனெனில், மறைநூலில் எழுதியுள்ளவாறு, "பழிவாங்குவதும் கைம்மாறு அளிப்பதும் எனக்கு உரியன" என்கிறார் ஆண்டவர் (உரோ 12:17-19). தீமைக்குப் பதில் தீமை செய்தால் அதனால் தீராத பகையும், பெரும் இழப்பும் ஏற்பட்டு வாழ்க்கை சீர்குலைந்துவிடும். எனவே தீமையைப் பொறுத்துக்கொள்வோம். அவன் அடித்தான். எனவே, நானும் அடித்தேன் என்று நீதிமன்றத்தில் சொன்னால், அரசு அதிகாரத்தை நம் கையில் எடுத்துக்கொண்டதாகச் சொல்லி அதற்கான தண்டனையையும் நாம் பெற்றாக வேண்டும். அப்படியானால், கடவுளின் அதிகாரத்தையே நாம் எடுத்துக்கொள்வது எவ்வளவு பெரிய குற்றம் என்பதை அறிந்து செயல்படவேண்டும்.

சவுல் மூவாயிரம் வீரர்களைக் கூட்டிக்கொண்டு தாவீதையும் அவருடைய ஆட்களையும் கொல்வதற்குத் தேடிச் சென்றார். அதே வேளையில், சவுலைக் கொல்வதற்கு தாவீதுக்கு வாய்ப்புக் கிடைத்தபோது அதைச் செய்யவில்லை. மேலும், அபிசாய் தாவீதிடம் தனக்கு உத்தரவு கொடுத்தால் போதும், நான் சவுலைக் கொன்றுவிடுகிறேன் என்று கேட்டபோது, தாவீது அபிசாயைப் பார்த்து, "அவர்மேல் கைவைக்காதே. வாழும் ஆண்டவர் மேல் ஆணை! ஆண்டவரே அவரைக் கொல்லட்டும். அவர் காலம் நிறைவுற்றுத் தாமாக இறக்கட்டும். ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவர்மேல் நான் கை வைக்காதபடி ஆண்டவர் என்னைக் காப்பாராக" (1 சாமு 26:10-11) என்று கூறி தாவீது பழிவாங்க விரும்பது அதைக் கடவுளிடமே ஒப்படைத்துவிட்டார். கடவுள் தாவீதுக்காகப் போரிட்டு வெற்றி கிடைக்கச் செய்தார். "உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்து விடு; அவரையே நம்பியிரு; அவரே உன் சார்பில் செயலாற்றுவார்" (திபா 37:5) எனவே, "தீமைக்குத் தீமை செய்வேன்" என்று சொல்லாதே; ஆண்டவரையே நம்பியிரு. தீமைக்கு நன்மை செய். அவர் உன்னைக் காப்பார் (நீமொ 20:22).

### அ) தீமையை நன்மையால் வெல்

நம்முடைய செயல்களோ தீங்கு செய்தவரை எப்படியாவது பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம்தான். ஒவ்வொருவருடைய உள்ளத்திலும், நாடிநரம்புகளிலும் ஊறிக்கிடக்கிறது. இதைப்பற்றி 'கண்ணுக்குக் கண்', 'பல்லுக்குப் பல்' என்று கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

ஆனால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். மாறாக, உங்களைத் துன்புறுத்துகிறவர்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள் (மத் 5:39) என்கிறார் இயேசு ஆண்டவர். தீமையை எதிர்க்க வேண்டாம் என்று சொல்லுகின்றபோது, தீமையான பண்புகளையோ, தீமையின் வடிவமான சாத்தானையோ அல்லது தீமையான சக்தியையோ அவர் குறிப்பிடாமல், தீமை செய்யும் மனிதனைப் பற்றியே குறிப்பிடுகிறார். ஆக, ஒரு மனிதன் பழிவாங்கும் எண்ணத்தோடு செயல்படக் கூடாது என்றுதான் சொல்லுகிறாரே தவிர, ஒரு நாட்டின் இராணுவம், காவல்துறை, நீதிமன்றங்கள் போன்றவை சமுதாயத்தின் தீமைகளைக் கண்டித்து முறையான நீதியை நிலைநாட்டுவதைத் தவறு என்று குறிப்பிடவில்லை (உரோ 13:1-4). இயேசு தனக்கு தீமை செய்தவரை எந்தச் சூழ்நிலையிலும் எதிர்க்கவில்லை.

அனைத்தையும் பொறுத்துக்கொண்டார். அவர் பிறந்தது முதல சிலுவையில் தலைசாய்க்கும்வரை அவருக்கு ஏற்பட்ட தீமைகள் ஏராளம். கற்றூணில் கட்டி அடித்தார்கள், கைகளிலும், கால்களிலும் ஆணிகொண்டு அறைந்து, படைவீரர்கள் அவரை ஏளனம் செய்தார்கள். அவர் ஒடுக்கப்பட்டார், சிறுமைப்படுத்தப்பட்டார். ஆயினும், அவர்தம் வாயைத் திறக்கவில்லை. அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டி போலும், உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறிபோலும் அவர் வாய்திறவாதிருந்தார் (ஏசா 53:7) அவருக்கு எதிரான அத்தனை தீமைகளையும், அவமானங்களையும், பொறுமையோடு தாங்கிக் கொண்டார். 'அடிப்போருக்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோருக்கு என் தாடையையும் ஒப்புவித்தேன். நிந்தனை செய்வோருக்கும் காறி உமிழ்வோருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை' (எசா 50:6) உயிர் பிரியும் வேளையிலும் தனக்குத் தீமை செய்தவர்களை அன்பு செய்தார். அவர்களின் தீச்செயல்களின் பொருட்டு 'தந்தையே, இவர்களை மன்னியும், ஏனெனில், தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை' (லூக் 23:34) என்று வேண்டினார். ஏனெனில், தீமை செய்தவர்களை மன்னித்து, அவர்களை அன்பால் அரவணைக்கவே விரும்பினார்.

**இ) தீமையையும் நன்மையாக மாறும்**

யோசேப்பு வாழ்வில் நடந்த எல்லாத் துன்பங்களையும் என் தந்தை வீட்டையும் கடவுள் மறக்கச் செய்தார் என்று சொல்லி தலைமகனுக்கு "மனாசே" என்று பெயரிட்டார் (தொநூ 41:51). இத்துடன் தொடக்க நூல் முடிந்திருக்க வேண்டும். தன் சகோதரர்களைச் சந்தித்து நலம் விசாரித்து செல்ல வந்து கொண்டிருந்த யோசேப்பைக் கண்டு அவரது சகோதரர்கள் இதோ வருகிறான் கனவின் மன்னன், நாம் அவனைக் கொன்று இந்த ஆழ்குழிக்குள் தள்ளிவிடுவோம், அவன் கண்ட கனவு என்ன ஆகும்? என்று பார்ப்போம் (தொநூ 37:20,21) என்று சொன்னதை யோசேப்பு கேட்கவில்லை. ஆனால் கடவுள் கேட்டிருந்தார். ஆகவே அதை கடவுள் மறக்கவில்லை. யோசேப்பிற்காக கடவுள் செயல்பட்டார். யோசேப்பின் சகோதரர்கள் அனைவரும் அவரிடம் ஓடி வரும்படி செய்து யோசேப்பை தாழவணங்கி பணியும் வரை கடவுள் அவர்களை விடவில்லை. யோசேப்பின் கனவு நிறைவேறியதை அறியும் வகையில் அதன்பின்பு ஏழு அதிகாரங்களை எழுதி தொடக்க நூலை முடிக்கிறார். ஆகையால் நாம் தீமைக்கும் நன்மை செய்யும்போது நமக்கு ஏற்படுகிற தீமைகளை கடவுள் நன்மையாக மாற்றுவார். பழிவாங்குவதும் கைம்மாறு அளிப்பதும் கடவுளுக்கு உரியன.

யோசேப்பின் சகோதரர்கள் அவருக்குத் தீமைகளைச் செய்தனர் (தொநூ 37:18-28). கடவுள் யோசேப்போடு இருந்ததால் அவர் அமிழ்ந்து போகவுமில்லை. அழிந்து போகவுமில்லை. மாறாக, மேலான பதவிக்கு உயர்த்தப்படுவதற்கு அந்தத் தீமைகள் படிகளாக இருந்தன. எகிப்து நாட்டிற்கு ஆளுநராக உயர்த்தப்பட்ட யோசேப்பு, தன் சகோதரர்களைக் கண்டபோது கசந்து கொள்ளவில்லை. மாறாக, கட்டித்தழுவி அவர்களோடு ஆறுதலாக உரையாடினார். 'நீங்கள் எனக்கு தீமை செய்ய நினைத்தீர்கள் ஆனால், கடவுள் அதை இன்று நடப்பதுபோலத் திரளான மக்களை உயிரோடு காக்கும்பொருட்டு நன்மையாக மாற்றிவிட்டார்' (தொநூ 50:20). ஆகவே, இப்பொழுது அஞ்சவேண்டாம். உங்களையும் உங்கள் குழந்தைகளையும் நான் பேணிக்காப்பேன் என்று இதமாகப் பேசி வந்தார். ஆகவே, கடவுள் யோசேப்போடு இருந்து அவருக்கு ஏற்பட்ட தீமைகள் அனைத்தையும் நன்மையாக மாற்றினார்.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

'எந்நிலையிலும் நம்பிக்கையென்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும்'(எபே6:16).

சென்ற மாத இதழில் கேட்டுக்கொண்டபடி எபிரேயருக்கு எழுதிய திருமுகம் பதினோராம் அதிகாரம் முழுவதையும் படித்து இருப்பீர்கள். நம் மூதாதையர்கள் நம்பிக்கை வாழ்வினால் பெற்றுக் கொண்ட நன்மைகளை எல்லாம் அதிலிருந்து அறிந்து கொள்கின்றோம். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த அவர்கள் தாங்கள் கொண்டிருந்த இறை நம்பிக்கையினால் தான் எப்போதும் பேசப்படுகிறார்கள். நம்பிக்கை என்னும் மந்திரச்சொல் மன உறுதியையும், வெற்றியையும் தருகின்றது.

'கிறிஸ்துவிடம் நாம் கொண்டுள்ள எதிர்நோக்கு இவ்வுலக வாழ்வை மட்டும் சார்ந்து இருந்தால் எல்லா மக்களையும் விட இரங்குதற்கு உரியவராய் இருப்போம்' (1கொரி15:19). இவ்வுலகு சார்ந்த ஆசீர்வாதங்களுக்காக நாம் கடவுள் மீது நம்பிக்கை கொண்டிருந்தால், நாம் இரங்குதற்குரிய பரிதாபமான நிலையில் இருக்கிறோம்.

சமீபத்தில் உடல் நலமற்ற ஒருவரைச் சந்திக்கச் சென்றிருந்தேன். அவர்கள் நான் ஆண்டவரைத்தானே நம்பி இருக்கிறேன்; தினந்தோறும் செபிக்கிறேன்; இறை வார்த்தை வாசிக்கிறேன்; எனக்கு ஏன் இப்படி நோய் வந்தது என்று அழுதார்கள். இன்று நம்மில் பலரும் கூட இத்தகைய மனநிலையில் இருக்கலாம். இறைவனை நம்புவதால் நோய் நொடிகள் வராது; செல்வ செழிப்புடன் இருக்கலாம்; துன்ப துயரங்கள் அணுகாது என்ற மனநிலையோடு வாழ்ந்தோமென்றால் நாம் இரங்குதற்கு உரியவர்களாகத் தான் இருப்போம். இவ்வுலக ஆசீர்வாதங்களுக்காக ஆண்டவரில் நம்பிக்கை வைக்கக் கூடாது. ஆனால், ஆண்டவரை நம்பி இருப்பதால் எந்த வேளையில் நமக்கு எது கிடைக்க வேண்டுமோ அதை அவர் நமக்குத் தருவார்.

'ஆகவே அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவை அனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்' (மத் 6:33). இறை நம்பிக்கையோடு இருந்து ஆண்டவருக்கு உகந்தவற்றைத் தேடி அவற்றைச் செய்து வாழும்போது இவ்வுலக வாழ்வுக்குத் தேவையான அனைத்தும் நமக்கு சேர்த்துக் கொடுக்கப்படும் என்று ஆண்டவர் இயேசு வாக்குறுதி கொடுத்திருக்கிறார். நாம் கொண்டுள்ள இறை நம்பிக்கை அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுவதாக இருக்க வேண்டும். இறையாட்சி என்பது உண்பதையும் குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல (உரோ14:17) என்று புனித பவுலும் கூறியுள்ளார். நாம் கொண்டுள்ள நம்பிக்கை இவ்வுலகைச் சார்ந்தவற்றிற்காக மட்டுமே இருக்கக் கூடாது.

ஆண்டவர் விதைப்பவர் உவமையின் விளக்கத்தை சீடர்களுக்கு சொல்லுவார். அப்போது பாறை மீது விழுந்த விதைகள் வார்த்தைகளை கேட்கும்போது அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்பவர்களைக் குறிக்கும். ஆனால், அவர்கள் வேரற்றவர்கள் சிறிது காலமே வார்த்தைகளை நம்புவார்கள். சோதனை காலத்தில் நம்பிக்கையை விட்டு விடுவார்கள் (லூக்8:13) என்று ஆண்டவர் கூறி இருப்பது போல நாமும் பல நேரங்களில் பாறை மீது விழுந்த விதைகளாகத்தான் இருக்கின்றோம் நம்பிக்கையில் வேரூன்றியவர்களாய் இல்லாமல் வேரற்றவர்களாகத்தான் இருக்கின்றோம்.

உலக வாழ்க்கைக்குரிய சோதனைகள் வரும் போது நம்பிக்கையில் தளர்ச்சியடைந்து விடுகின்றோம். நாமும் அமைதி இழந்து நம்மைச் சுற்றி இருப்பவர்களையும் அமைதி இழக்க செய்து இரங்குதற்கு உரியவர்களாய் மாறி

விடுகிறோம். இவ்வுலகையும் இவ்வுலகு சார்ந்தவற்றையும் வெற்றி கொள்ளச் செய்வது நமது நம்பிக்கைதான். கனிதரும் மரத்தின் வேர்கள் நம் கண்களுக்குப் புலப்படுவதில்லை. ஆனால், அந்த வேரினால் தான் அம்மரம் கனிகளைக் கொடுக்கின்றது. மரத்துக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் அனைத்தும் அந்த வேரின் மூலம் தான் கிடைக்கின்றன. அதுபோல்தான் நாம் கொண்டுள்ள நம்பிக்கையும் நமக்குள் வேராக இருந்து நம்மைக் கனி கொடுக்க வைத்துச் செயலாற்றுகின்றது.

எப்பொழுதெல்லாம் நம்பிக்கையில் தளர்வுறுகின்றோமோ அப்பொழுதெல்லாம் எபிரேயர் 11 ஆம் அதிகாரத்தை மீண்டும் மீண்டும் வாசித்து அவர்களைப் போல் திட நம்பிக்கையோடு வாழ்வோம். பலருக்கும் வழி காட்டுவோம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

# இறையாட்சிக்கு உட்படத் தயாரா?

நாம் அனைவரும் கடவுளின் பிள்ளைகள். அவர் நம்மை தேர்ந்தெடுத்து அழைத்தது நாம் அவர் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே. அதனால்தான் அவர் நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலம் தமக்கு சொந்த பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் முன்குறித்து வைத்தார். இதுவே அவரது விருப்பம் என்கிறார் தூய பவுல் (எபே 1:5)

ஒவ்வொருவருக்கும் அவர் ஒரு கடமையை கொடுத்துள்ளார். இந்த இடத்தில் கடமை என்று சொல்வதைக் காட்டிலும். பொறுப்பை ஒப்படைத்துள்ளார் என்று சொல்வதே சிறந்ததாயிருக்கும். ஏனென்றால் கடமை என்பது அனைவருக்கும் பொதுவான ஒரு செயல்பாட்டைக் குறிக்கிறது. பொறுப்பு என்பது தனிநபர் சம்மந்தப்பட்டது. அதைத்தான் இயேசு திருமண விருந்துக்கு போயிருந்த தம் தலைவன் திரும்பி வந்து கதவைத் தட்டும் போது உடனே அவருக்கு கதவைத் திறக்க காத்திருக்கும் பணியாளருக்கு ஒப்பாய் இருங்கள் என்று, நம் பொறுப்பை உணர்த்தும் வகையில் அறிவுறுத்துகிறார் (லூக் 12 :36) நாம் விழிப்பாக இருக்க வேண்டும் என்று உணரக்கூடிய வகையில் அழைப்பு விடுக்கிறார் என்றும் சொல்லலாம். ஏனென்றால் நமக்கு கொடுக்கப்பட்ட பணியில் உண்மையாகவும், நேர்மையாகவும், அர்பணிப்புடனும் செயல்படும்போது நம்மை ஒரு வேலையாளாக அல்ல, மாறாக கடவுளின் அன்புப் பிள்ளையாக செயல்படவே இவ்வாறு குறிப்பிடுகிறார். ஏனென்றால் உங்கள் தந்தை உங்களைத் தம் ஆட்சிக்கு உட்படுத்த திருவுளம் கொண்டுள்ளார் (லூக் 12:32). இப்பேற்பட்ட மேன்னையை நாம் பெற இந்த அன்புக் கட்டளையை இடுகிறார். ஆனால் அவர் விருப்பத்தை அறிந்தவர்களாக இருந்து கொண்டு ஏனோதானோ என்று செயல்படும் போது தன் தலைவன் விருப்பத்தை அறிந்திருந்தும் ஆயத்தமின்றியும் அவர் விருப்பப்படி செயல்படாமல் இருக்கும் பணியாளர் நன்றாய் அடிபடுவான் (லூக் 12:47) இது தான் நம் வாழ்வில் நாம் சந்திக்கின்ற துன்பங்கள், இடையூறுகள், தோல்விகள், தடைகள், பிரச்சனை. ஆனால், அவர் விரும்பும் பணியாளர் யார் என்றால் தலைவன் வந்து பார்க்கும் போது தம் பணியைச் செய்து கொண்டிருக்கும் பணியாளர். அவர் பேறுபெற்றவர். (லூக் 12:43) அவரைத் தம் உடைமைகளுக்கெல்லாம் அதிகாரியாக அமர்த்துவார். எனவே மிகுதியாக பெற்றுக் கொண்ட நற்செய்திப் பணியாளர்களாகிய நாம் அதிக பொறுப்புடன் செயல்படவும். அதன் மூலம் இறையாட்சியில் உட்படவும் நம்மை தகுதிப்படுத்துவோம்.

நற்பணி M.**லூயிஸ் ஜான் போஸ்கோ**

செப்டம்பர் மாத நற்செய்திப் பணியாளர் செய்தி மடலில் (இறையாட்சியில் மாண்புறும் பெண் குழந்தைகள்) இருந்து மட்டுமே கேள்வி கேட்கப்பட்டுள்ளது



**இடமிருந்து வலம்**

2. யார் கிறிஸ்தவ வழிபாட்டின் தந்தை என அழைக்கப்பட்டார்?
4. கடவுளோடு தினமும் எதில், ஒன்றிப்பில் வளர வேண்டும்?
6. எதனோடு கூடிய இறைவேண்டுதல் தந்தையாம் கடவுளுக்கு மிகவும் விருப்பமானது?
8. அதிகம் துன்பப்பட்ட இறைவாக்கினர் யார்?
10. ஆலோசகர் எந்த உணர்வுடன் செயல்பட வேண்டும்?
12. நமது எதன் மூலம் ஆண்டவரின் சாட்சிகளாய் வாழ்வோம்?
13. கடவுளின் எதைப் பெற அவர் திருவுளத்தை நிறைவேற்றுதல் இன்றியமையாதது?
15. உணர்வை விட எதில் நம்பிக்கை வைக்க வேண்டும்?

**மேலிருந்து கீழ்**

1. எது நல்லுறவுக்கான சிறந்த பாதையாகும்?
3. கடவுளுக்கு ஏற்புடையவராய் வாழ்ந்து மீண்டும் கடவுளின் ஆசியைப் பெற்று இழந்த அனைத்தையும் இரட்டிப்பாகப் பெற்றவர் யார்?
5. ஆண்டவர் யாரிடம் ''ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்'' என்றார்?
7. இருப்பதை அன்பு செய்யப் பழகிக் கொள்வோம். இல்லாததைப் பற்றிய எது காணாமல் போகும்?
9. கடவுளை __________ செல்லுங்கள். அவரும் உங்களை __________ வருவார்.
11. நல்ல கொடைகள் அனைத்தும் நிறைவான வரமெல்லாம் எதன் பிறப்பிடமான விண்ணகத் தந்தையிடமிருந்து வருகின்றன?
14. நம்மையே தாழ்த்திக் கொள்வது எந்த பாதையின் இரண்டாவது படியாகும்?

**போட்டி விதிமுறைகள்**

1. ஒவ்வொரு மாதமும் 15 ம் தேதிக்குள் விடைகள் வந்து சேர வேண்டும்
2. குறுக்கெழுத்து கட்டங்கள் நிரப்பப்படுவதோடு போன மாத பணியாளர் இதழில் நீங்கள் கண்டுபிடிக்கும் வார்த்தை இருக்கும் சரியான பக்க எண் குறிப்பிடப்படவேண்டும்

3. விடை குறித்து சகோதரரின் முடிவே இறுதியானது
4. பரிசுத்தொகை ரூ 500/-. நிறைய பேர் சரியான எழுதியிருந்தால், குலுக்கலின் மூலம் ஒரு நபருக்கு பரிசுத்தொகை வழங்கப்படும்.

சென்ற மாத போட்டியில் கலந்து கொண்டவர்கள் 16 பேர். சரியான விடை எழுதியோர்: நற்பணி செபஸ்தியான், **ஆவுடைப்பொய்கை.** நற்பணி ஜெயந்தி, கரோலின் எமிலி, **பரமக்குடி.** நற்பணி லில்லி கிளாரா, **இடைக்காட்டூர்.** நற்பணி பாத்திமா ராணி, மலர், **ம.மிக்கேல்பட்டணம்.** நற்பணி ஏஞ்சல் நிர்மலா, **இராம்நகர்.** நற்பணி தைனஸ்மேரி, ஜான்சிமேரி, **ஆர்.எஸ் மங்கலம்**

**குலுக்கல் மூலம் பரிசு பெறுபவர்:** நற்பணி A. **ஜான்சிமேரி, ஆர்.எஸ் மங்கலம்**

*அனைவருக்கும் வாழ்த்துகள்.*

## திருவிவிலியமும் திருக்குறளும்

தர்சு நகரில் யூத குடியுரிமை பெற்ற குடும்பத்தில் பிறந்த சவுல், திருச்சட்ட ஆசிரியர் கமாலியேலிடம் கல்வி கற்றவர்; யூதச்சட்டத்தின்மேல் அவருக்கு இருந்த ஆர்வத்தால் திருச்சபையை துன்புறுத்தி ஒழிக்க முற்பட்டவர்; கிறிஸ்தவர்களைக் கைது செய்து சிறையில் அடைக்க தலைமை குருவின் கடிதத்தைப்பெற்று தமஸ்கு நகருக்கு செல்லும் வழியில் திடீரென வானத்திலிருந்து தோன்றிய ஓர் ஒளி அவரை சூழ்ந்து வீசியது. மேலும், சவுலே சவுலே ஏன் என்னை துன்புறுத்துகிறாய் என்ற குரலும் கேட்டது. சவுல் ஆண்டவரே நீர் யார் என கேட்க, நீ துன்புறுத்தும் இயேசு நானே என்கிறார் சவுல். கண்கள் திறந்திருந்தும் பார்க்க இயலாத நிலையில் இயேசு கூறியபடி அனனியா என்ற சீடர் மூலம் பார்வையடைகிறார். அவரிடமே திருமுழுக்கு பெற்று வலிமை அடைகிறார் (திப 9:2-10).

ஆண்டவரின் திருவுளத்தை நிறைவேற்ற பவுலை அவருடைய கருவியாக தேர்ந்தெடுத்து, பல்வேறு துன்பங்கள் வழியாக நற்செய்தியைப் பறைசாற்ற இயேசு பயன்படுத்தினார். பர்னபாவின் உதவியுடன் யூதேயா, கலிலேயா, சமாரியா போன்ற பல இடங்களில் எதிர்ப்புகளுக்கிடையே துணிவுடன் நற்செய்திப் பணியாற்றினார். தமது தூதுரைப்பயணங்கள் மூலமாகவும், பல்வேறு சபைகளுக்கு எழுதிய மடல்கள் மூலமாகவும் இறையாட்சி குறித்து பறைசாற்றிவந்தார். தான் சந்தித்த இடர்பாடுகள், வேதனைகள், சொந்த மக்கள் மற்றும் பிற இனத்தவரால் வந்த நெருக்கடிகள் அனைத்தையும் துச்சம் எனக்கருதி வாழ்நாள் முழுவதையும் கடவுளுக்காக அர்ப்பணித்தார்.

மேற்கண்ட கருத்தை வலியுறுத்தும் வண்ணம் திருவள்ளுவர் வினைத்திட்பம் என்ற அதிகாரத்தில் 669 ஆம் குறட்பாவில்

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை

என்று எழுதுகிறார். இன்பம் தரக்கூடிய செயல் என்பது துன்பம் வந்தாலும் அதனைப்பொருட்படுத்தாமல் மன உறுதியுடன் துணிவோடு நிறைவேற்றி முடிக்கக்கூடியதே ஆகும்.

இதன்படியே பவுலும், 'நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றிவாகையே' என்று கூறுகிறார் (2திமோ 4:7-8). மேலும், இனி வாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் என்ற நம்பிக்கையுடன் பவுலடியார் வாழ்ந்ததைப் போன்று நாமும் கடவுளின் ஆவியாரால் இயக்கப்பட் வாழ்வை மேற்கொள்வோம்.

- நற்பணி **முத்து ஜூலியானா**, இராம் நகர்.

## மறைத்தூது சீடத்துவ பயிற்சியை நிறைவு செய்து 2026ஆம் ஆண்டு செப்டம்பர் 27ஆம் நாள் அர்ப்பணம் ஏற்ற புதிய நற்செய்திப் பணியாளர்களை பணிக்குடும்பத்திற்கு

*அன்புடன் வரவேற்கிறோம்.*

| வ.எண் | பெயர் | பங்கு | வட்டாரம் |
|---|---|---|---|
| 1. | A.லீமா ரோஸ் | இளையான்குடி | சாலைக்கிராமம் |
| 2. | R.பிரியா கிறிஸ்டி | இளையான்குடி | சாலைக்கிராமம் |
| 3. | F.ஆரோக்கிய லியோ | பரமக்குடி | பரமக்குடி |
| 4. | M.ஆரோக்கிய மேரி | திருவரங்கம் | ம மிக்கேல் பட்டணம் |
| 5. | M.இருதய ராஜ் | நிறைவாழ்வு நகர் | விருதுநகர் |
| 6. | J.P.பெலிக்ஸ் ஆரோக்கிய மேரி | | காளையார் கோவில் |
| 7. | M.மரிய தெரஸ் | பள்ளித் தம்மம் | காளையார் கோவில் |
| 8. | A.ஸ்டெல்லாராணி | போஸ்கோமையம் | காளையார் கோவில் |
| 9. | M.செல்வபாக்கியம் | காளையார் கோவில் | காளையார் கோவில் |
| 10. | A.ஆல்பர்ட் ஆமோஸ் | தங்கச்சி மடம் | தங்கச்சி மடம் |
| 11. | M.இவாஞ்சலின் பார்பரா | தங்கச்சி மடம் | தங்கச்சி மடம் |
| 12. | P.மரிய கிரேக்கா | T.சூசையப்பர் பட்டினம் | தங்கச்சி மடம் |
| 13. | A.ஜோஸ்பின் | T.சூசையப்பர் பட்டினம் | தங்கச்சி மடம் |
| 14. | L.மரிய ஈஸ்டால் | இராமேஸ்வரம் | இராமேஸ்வரம் |
| 15. | J.கீதா | இராமேஸ்வரம் | இராமேஸ்வரம் |
| 16. | K.தேன் மொழி | பாம்பன் | பாம்பன் |
| 17. | S.கமிலா மேரி | பாம்பன் | பாம்பன் |
| 18. | S.யூஜின் மேரி | பாம்பன் | பாம்பன் |
| 19. | P.கமலா சபாடினி | பாம்பன் | பாம்பன் |
| 20. | M.டெஸ்டிமோனா | பாம்பன் | பாம்பன் |
| 21. | S.மரிய ஹெர்சன் | பாம்பன் | பாம்பன் |
| 22. | S.இஸ்ரவேல் | இராமேஸ்வரம் | இராமேஸ்வரம் |
| 23. | K.சியாமளா | முத்துப்பேட்டை | முத்துப்பேட்டை |
| 24. | P.அற்புத ஆரோக்கிய சோபியா | | முத்துப்பேட்டை |
| 25. | M.ஜோசப் ராஜ் | முத்துப்பேட்டை | முத்துப்பேட்டை |
| 26. | J.ஆபிரகாம் | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 27. | M.அபூர்வ ஏஞ்சலின் மேரி | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 28. | M.வேளாங்கண்ணி மேரி | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 29. | S.ஜோசப் பாலா | V.மிக்கேல் பட்டணம் | இடைக்காட்டூர் |
| 30. | V.பீட்டர் | V.மிக்கேல் பட்டணம் | இடைக்காட்டூர் |
| 31. | P.மெரிலின் அன் மெர்சி | இடைக்காட்டூர் | இடைக்காட்டூர் |
| 32. | J.சகாயமேரி | சிவகங்கை | சிவகங்கை |
| 33. | J.ஜான் நித்தியா | வல்லணி | சிவகங்கை |
| 34. | A.விக்டோரியா | மானாமதுரை | மானாமதுரை |
| 35. | A.அன்னமுத்து லீமாரோஸ் | ஆண்டாவூரணி | சி.கே.மங்கலம் |
| 36. | V.அந்தோணியம்மாள் | தொண்டி | சி.கே.மங்கலம் |
| 37. | V.இளையராஜா | தொண்டி | சி.கே.மங்கலம் |
| 38. | P.செல்வி | அஞ்சுக்கோட்டை | சி.கே.மங்கலம் |
| 39. | M.அதிசய ஜெனிட்டா | தேவகோட்டை | தேவகோட்டை |
| 40. | V.அந்தோணி பர்னாந்து | தேவகோட்டை | தேவகோட்டை |

| | | |
|---|---|---|
| 41. A.கிறிசாந்தி | தேவகோட்டை | தேவகோட்டை |
| 42. S.குழந்தையம்மாள் | தேவகோட்டை | தேவகோட்டை |
| 43. M.அருள்மேரி | செஞ்சை | செஞ்சை |
| 44. S.மெர்சி | செஞ்சை | செஞ்சை |
| 45. A.தெரசாள் | அமராவதி புதூர் | செஞ்சை |
| 46. J.கிறிஸ்டி ரூபினா | மானகிரி | ஆவுடைப்பொய்கை |
| 47. M.அமலி சரோஜா | செக்காலை | செக்காலை |
| 48. A.யோனிஸ்கா | சாயல்குடி | சாயல்குடி |
| 49. J.ஸ்டெல்லா | ரோச்மாநகர் | சாயல்குடி |
| 50. A.ஆரோக்கிய மேரி | ரோச்மாநகர் | சாயல்குடி |
| 51. A.சகாயம் | M.சவேரியார் பட்டணம் | சாயல்குடி |
| 52. A.மரிய பாஸ்கர் | அருப்புக்கோட்டை | சாயல்குடி |
| 53. J.விக்டர் செபஸ்தியான் | வேம்பார் | சாயல்குடி |
| 54. M.ஜோசப் | தொண்டி | சி.கே.மங்கலம் |
| 55. J.ஆரோக்கிய தவம் | தொண்டி | சி.கே.மங்கலம் |
| 56. M.ஜோஸ்பின் ஆக்னல் சிறுமலர் | | தொண்டி |
| 57. S.ஜஸ்டின் திரவியம் | திருவெற்றியூர் | சி.கே.மங்கலம் |
| 58. R.ஸ்ரீதேவி | சிலாமேகநாடு | புளியால் |
| 59. R.மேகலா | சிலாமேகநாடு | புளியால் |
| 60. S.அமல யோகராணி | சிலாமேகநாடு | புளியால் |
| 61. A.அற்புத ராஜா | R.S.மங்கலம் | R.S.மங்கலம் |
| 62. J.இளையராஜா லீயோன் | சாயல்குடி | சாயல்குடி |

## ஒரு பணியளாரின் மன்றாட்டு



நீர் எங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் மற்றவர்களும் கடைப்பிடிக்கும்படி(மத் 28:20) கற்பிக்கச் சொன்னவரே இறைவா!

உலகத் தூதுரை ஞாயிறின் நூறாவது ஆண்டைக் கொண்டாட இருக்கும் நாங்கள், 'ஒன்றாய் இருப்பார்களாக' (யோவா 17:21)என்று நீர் செபித்தபடி, நாங்கள் ஒன்றாயிருந்து, நீர் எங்களுள் வாழ்கிறீர் (கலா 2:20) என்று உணர்ந்து,உம்மோடு இணைந்து கனி தர(யோ 15:4), எங்களைப் பற்றி அல்ல- உம்மைப் பற்றியே அறிவிக்க(2 கொரி 4:5),உம்மில் ஒன்றாகவும் தூதரைப் பணிகளில் இணைந்து செயல்படவும் வேண்டிய மனநிலையைத் தர வேண்டும் என்று உம்மை மன்றாடுகிறோம்.

## இது சாத்தியமா ?

இயேசுவிடம், விடியற்காலைக்கருக்கலில் எழுந்து செபிக்கக்கூடிய பழக்கம் இருந்தது. (மா.1:35). 'உமது பேரன்பை நான் வைகறையில் கண்டடையச் செய்யும்' - (திபா 143:8). நானும் பணியாளராகி பல ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. விடியற்காலையில் எழுந்து தனிச்செபத்தில் ஈடுபடுவதென்பது, என்னைப் பொறுத்தமட்டில், எட்டாக்கனியாகவே இருந்தது. தனிச் செபம் இருந்தது; ஆனால் விடியற்காலையில் எழுந்து செபிப்பது என்னிடத்தில் இல்லாமலிருந்தது. விடியற்காலையில் எழும் பழக்கம் எனக்கு வரவே வராதா என்ற ஏக்கம் இருந்தது.

சமீபத்தில், என் ஏக்கத்திற்கான தீர்வு கிடைத்து. ஆம்; விடியற்காலையில் எழுந்து செபிக்க ஆண்டவர் அருள்கூர்ந்தார். ஆண்டவரின் அருளுக்காகவும், பேரிரக்கத்திற்காவும் நெஞ்சார நன்றி செலுத்துகிறேன். ஆண்டவர் அருளுக்காகவும், இரக்கத்திற்காகவும் பொறுமையோடு காத்திருக்கும் போது காலம் கனிவது சாத்தியம் தானே!

நற்பணி **J. அருள் இளங்கோ**, இராம்நகர்

## அக்டோபர் 2026 — வட்டாரத் தியானக் கூட்டம்

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 1. | 11.10.26 | புளியால்<br>978749588 | செயலர்<br>9787967272 |
| 2. | 11.10.26 | சருகணி<br>9943632636 | நற்பணி A. சகாயராஜா<br>7010404853 |
| 3. | 11.10.26 | இராஜசிங்கமங்கலம்<br>9524495693 | நற்பணி M. மரியகிரகோரி<br>9486965799 |
| 4. | 18.10.26 | தேவகோட்டை<br>9095866732 | நற்பணி A. சகாயராஜா<br>7010407853 |
| 5. | 18.10.26 | ஆவுடைப்பொய்கை<br>84897703006 | செயலர்<br>9787967272 |
| 6. | 18.10.26 | மானாமதுரை<br>9150579311 | நற்பணி A. தனிநாயகம்<br>9486037889 |
| 7. | 24.10.26 | தங்கச்சிமடம்<br>9442758641 | நற்பணி A. சகாயராஜா<br>7010407853 |
| 8. | 24.10.26 | பாம்பன்<br>9790605049 | செயலர்<br>9787967272 |
| 9. | 24.10.26 | இராமேஸ்வரம்<br>9626303365 | நற்பணி M. மரியகிரகோரி<br>9486965799 |
| 10. | 25.10.26 | இடைக்காட்டூர்<br>9442857812 | நற்பணி A. சகாயராஜா<br>7010407853 |
| 11. | 25.10.26 | சாயல்குடி<br>6383152402 | செயலர்<br>9787967272 |

## ஆண்டுத் தியானம் — 2026

| நாள் | | இடம் | தியான வழிகாட்டி | நெறியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. | அக்டோபர் 26<br>**09/10&11** | அருள்சான்று நிலையம்<br>பரமக்குடி | Fr. **ரூபன்** SDB<br>Sr. **விமலா** ISONE | நற்பணி M.சேவியர்<br>நற்பணி K.ஜஸ்டின் கபிரியேல் |
| 2. | அக்டோபர் 26<br>**23/24&25** | அமல அன்னை<br>அமைதியகம், காயாவயல் | Fr. **ரூபன்** SDB<br>Sr. **விமலா** ISONE | நற்பணி I.செபஸ்தியான்<br>நற்பணி A.சகாயலூயி |
| 3. | நவம்பர் 26<br>**20/21&22** | அருள்சான்று நிலையம்<br>பரமக்குடி | Fr. **ரூபன்** SDB<br>Sr. **விமலா** ISONE | நற்பணி GMS.ராணி<br>நற்பணி S.ஸ்தனிஸ்லாஸ் |
| 4. | நவம்பர் 26<br>**27/28&29** | அமல அன்னை<br>அமைதியகம், காயாவயல் | Fr. **ரூபன்** SDB<br>Sr. **விமலா** ISONE | நற்பணி J.அருள் இளங்கோ<br>நற்பணி கோ.அம்பிகா எலியாஸ் |
| 5. | டிசம்பர் 26<br>**04/05&06** | அமல அன்னை<br>அமைதியகம், காயாவயல் | Fr. **ரூபன்** SDB<br>Sr. **விமலா** ISONE | நற்பணி L.ஆரோக்கியசாமி<br>நற்பணி A.R.சூசைராஜ் |

# நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 2.10.26 | அம்புரோஸ் அறநெறி அமைப்புக் கூட்டம் | நற்பணி செபஸ்தியான் இல்லம் ஆவுடைப்பொய்கை |
| 3.10.26 | தஞ்சை பணியாளர்கள் அர்ப்பண விழா | வேளாங்கண்ணி |
| 03--17 10.26 | வியாகுல அன்னை நவ-துறவியர் நற்செய்தி அறிவிப்புப் பணி பயிற்சி &களப்பணி | பரமக்குடி & பங்குகள் |
| 4.10.26 | மறைமாவட்டத் திருப்பயணம்-2026 | ஓரியூர் |
| 4.10.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புதுக்கோட்டை, மணல்மேடு, இராஜகோபாலபுரம் |
| 7.10.26 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமலன்னை அமைதியகம், காயாவயல். அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 9.10.26-11.10.26 | ஆண்டுத் தியானம் IV | அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 10.10.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | தங்கச்சிமடம், மாந்தை, தஞ்சை அண்ணாநகர் |
| 11.10.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம், காளையார்கோவில் ஓரியூர், சிவகங்கை, தரங்கம்பாடி மணல்மேல்குடி |
| 11.10.26 | வட்டாரத் தியானக் கூட்டம் | புளியால், சருகணி, இராஜசிங்கமங்கலம் |
| 17.10.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | மங்களபுரம் |
| 18.10.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமைதியகம், சி.கே.மங்கலம், சாயல்குடி, மன்னார்குடி, அறந்தாங்கி, தஞ்சாவூர் பேராலயம், சம்னசூர் |
| 18.10.26 | தொடர்களப்பணி | இராம்நகர், நானாக்குடி, காலங்காடு, கமுதி, கீழ உச்சானி, செங்குடி, சாயல்குடி பங்குகள் |
| 18.10.26 | வட்டார தியானக்கூட்டம் | தேவகோட்டை, ஆவுடைப்பொய்கை, மானாமதுரை வட்டாரங்கள் |
| 19.10.26 | செய்தியாளர்கள் பயிற்சி | ஆனந்தா அருங்கொடை மையம். ரஸ்தா |
| 24.10.26 | வட்டார தியானக்கூட்டம் | இராமேஸ்வரம், தங்கச்சிமடம், பாம்பன் வட்டாரங்கள் |
| 23.10.26-25.10.26 | ஆண்டுத் தியானம் V | அமலன்னை அமைதியகம், காயாவயல். |
| 24.10.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | நாகப்பட்டிணம் |
| 25.10.26 | வட்டாரத் தியானக் கூட்டம் | இடைக்காட்டூர், சாயல்குடி வட்டாரங்கள் |
| 25.10.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | ஆர்.எஸ், மங்கலம், எருக்கூர், சீர்காழி மயிலாடுதுறை, திருகோகர்ணம் |

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 10.10.26 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி X. லூர்துமேரி |
| 11.10.26 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி G. பிரான்சிஸ் சேவியர்<br>நற்பணி A. யூஜின் அமலராஜ் |
| 11.10.26 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி S. ராஜேந்திரன்<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 11.10.26 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி P. சகாயராணி<br>நற்பணி G. மிக்கேல் பிரபாகர் |
| 11.10.26 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி S. பால்ராஜ்<br>நற்பணி கோ.அம்பிகா எலியாஸ்<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 18.10.26 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. செலின் பிரபா<br>நற்பணி S. சகாயராணி<br>நற்பணி M. ரோஸ்லின் ரீட்டா |
| 18.10.26 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி J. சார்லஸ்<br>நற்பணி T. ஸ்டீபன் |
| 18.10.26 | புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம் | நற்பணி X. சகாய லூயிஆரோக்கியசாமி<br>நற்பணி A. சகாயதமிழ்செல்வி |
| 25.10.26 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி V. செங்கோல்மேரி<br>நற்பணி P. சகாயராணி<br>நற்பணி S. தைனஸ்மேரி |

**இப்ப இல்லாட்டி எப்ப ?**

-எல்லாரோ

எதைப் பிறருக்குக் கொடுக்கிறோமோ
அதுதானே நமக்குத் திரும்பக் கிடைக்கும்.

**அன்பைக்** கொடுத்தால் **அன்பு.**
**வம்பைக்** கொடுத்தால் **வம்பு.**

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்; இன்னும் கூடுதலாகவும் கொடுக்கப்படும். மாற்கு 4:24

**வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்**

| | |
|---|---|
| படைகளின் ஆண்டவர் ஆணையிட்டுக் கூறுகின்றார்: "நான் எண்ணியவாறு யாவும் நடந்தேறும்; நான் தீட்டிய திட்டமே நிலைத்து நிற்கும்" எசாயா 14:24 | **எசாயா 14:24** |

| நாள் | மையம் | நெறியாளர்கள் |
|---|---|---|
| 04.10.26<br>I | திரு இருதய ஆண்டவர் கோவில், புதுக்கோட்டை | நற்பணி A. சகாயராஜா<br>7010407853<br>நற்பணி S. சகாயராணி<br>9047495319 |
| 04.10.26<br>I | புனித ஜெபமாலை அன்னை கோவில், இராஜகோபாலபுரம் | நற்பணி M. விசுவாசம்<br>9442758641<br>நற்பணி S. ஹென்றி<br>9443983519 |
| 04.10.26<br>I | புனித பெரிய நாயகி கோவில், மணல்மேடு | நற்பணி A.R. சூசைராஜ்<br>8248102600<br>நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ<br>9443503618 |
| 10.10.26 | திரு இருதய ஆண்டவர் கோவில், மாந்தை | நற்பணி A.R. சூசைராஜ்<br>8248102600<br>நற்பணி A.ஆரோக்கியசாமி(போ.மையம்)<br>9787037717 |
| 10.10.26 | புனித செபஸ்தியார் கோவில் அண்ணாநகர், தஞ்சை | நற்பணி I. செபஸ்தியான்<br>7339576282<br>நற்பணி S. அந்தோணி பிரகாஷ்<br>9787791869 |
| 10.10.26<br>II | புனித செபமாலை அன்னை கோவில், தரங்கம்பாடி | நற்பணி A. சத்தியேந்திரன்<br>6379405762<br>தை.அமல்ராஜ்<br>9443983519 |
| 11.10.26<br>II | புனித ஆரோக்கியமாதா கோவில், மணல்மேல்குடி | நற்பணி S. அந்தோணி பிரகாஷ்<br>9787791869<br>நற்பணி I. செபஸ்தியான்<br>7339576282 |
| 17.10.26 | புனித லூர்துஅன்னை கோவில், மங்களபுரம் | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>9787791869<br>நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>9843490206 |
| 18.10.26<br>III | புனித மிக்கேல் அதிதூதர் கோவில், சம்மனசூர் | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>9443157260<br>நற்பணி P. சகாயராணி<br>9488024773 |
| 18.10.26<br>III | புனித சூசையப்பர் கோவில், மன்னார்குடி | நற்பணி M. விசுவாசம்<br>9442758641<br>நற்பணி A.அடைக்கலம்<br>9524495693 |
| 18.10.26<br>III | திரு இருதய ஆண்டவர் கோவில், தஞ்சாவூர் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>9843490206<br>நற்பணி S. அந்தோணி பிரகாஷ்<br>9787791869 |
| 18.10.26<br>III | கிறிஸ்து அரசர் கோவில் அறந்தாங்கி | நற்பணி J. அருள் இளங்கோ<br>9942434307<br>நற்பணி A. ஆரோக்கியசாமி(செக்காலை)<br>9843323439 |

த.பி.பா

| நாள் | மையம் | நெறியாளர்கள் |
|---|---|---|
| 24.10.26 | புனித லூர்து மாதா கோவில் நாகப்பட்டிணம் | நற்பணி A. தனிநாயகம் 9486037889<br>நற்பணி S. மோட்ச அலங்காரம் 9843490206 |
| 25.10.26 IV | புனித சிந்தாத்திரி மாதா கோவில், எருக்கூர் | நற்பணி A. தனிநாயகம் 9486037889<br>நற்பணி S.ராஜேந்திரன் 9865749356 |
| 25.10.26 IV | புனித லூர்துமாதா கோவில் சீர்காழி | நற்பணி M. விசுவாசம் 9442758641<br>நற்பணி S. பால்ராஜ் 9789077287 |
| 25.10.26 IV | புனித சவேரியார் கோவில் மயிலாடுதுறை | நற்பணி S. மோட்ச அலங்காரம் 9843490206<br>நற்பணி A.R. சூசைராஜ் 8248102600 |
| 25.10.26 IV | புனித பிரான்சிஸ் சலேசியார் கோவில், திருகோகர்ணம் | நற்பணி J. ஆரோக்கியசாமி 9443157260<br>நற்பணி கோ.அம்பிகா எலியாஸ் 9655772927 |

## புனித ஜெரால்டு மஜெல்லா (அக்டோபர் 16)



கி.பி. 1726ம் ஆண்டு ஏப்ரல் 6ம் தேதி, பசிலிக்காத்தா மாநிலத்தில் முரோ லூக்கானோ என்ற ஊரில் பிறந்த ஜெரார்டு மஜெல்லா, தனது 12வது வயதில் தந்தையை இழந்தார். ஐந்து குழந்தைகளைக் கொண்ட இந்த ஏழைக் குடும்பத்தில் இளையவரான இவரைத் தையல் கற்றுக்கொள்ளும்படி இவரது தாய், தனது சகோதரரிடம் அனுப்பினார். எனினும் தனது மாமாவிடம் மிகவும் துன்புற்ற ஜெரார்டு, அனைத்திலும் பொறுமை காத்தார். தனது தையல் தொழிலில் கிடைத்த பணத்தின் ஒரு பகுதியைத் தாயிடம் கொடுத்துவிட்டு எஞ்சியுள்ள பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்தார்.

23வது வயதில் உலக மீட்பர் சபையில் அருள்சகோதரராகச் சேர்ந்த தோட்டவேலை, தையல், கோவில் வேலை, சமையல், தச்சுவேலை எனப் பல வேலைகளில் ஈடுபட்டார். இவருக்கு 27 வயது நடந்தபோது ஒரு பெண் இவர்மீது அபாண்டமாகப் பழி சுமத்தினார். அப்போதும் பொறுமை காத்தார். அப்பெண் பின்னர் தனது செயலுக்காக வருந்தினார்.

உலக மீட்பர் சபையின் அருள்சகோதரரான ஜெரார்டு மஜெல்லா அவர்கள் ஒருநாள் பிரோபாசூஃலோ குடும்பத்தைச் சந்தித்துவிட்டுத் திரும்பினார். அச்சமயம் அவ்வீட்டில் அவரது கைக்குட்டை விழுந்துவிட்டது. அதைக் கவனிக்காமல் அவர் சென்ற பின்னர், அதைப் பார்த்த அந்த வீட்டு இளைஞர்களில் ஒருவர் விரைந்து சென்று அதை ஜெரார்டு அவர்களிடம் கொடுத்தார். அவரோ, 'இதை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள், ஒரு நாளைக்கு இது உதவும்' என்று சொல்லிச் சென்றார். பின்னர் அந்த இளைஞர் திருமணமாகி அவர் மனைவி கருவுற்று, குழந்தை பிறக்கும் பேறுகால வேளையில் அதிக வேதனையில் மரணத்தைத் தழுவும் சூழல் ஏற்பட்டது. அந்நேரத்தில் அப்பெண்ணுக்கு அந்தக் கைக்குட்டை நினைவுக்கு வர, அதை கொண்டுவந்து அப்பெண்ணின் வயிற்றில் வைத்தார். உடனே வேதனை மறைந்து நலமான ஒரு

குழந்தையைப் பெற்றெடுத்தார். இச்செய்தி எல்லா இடங்களிலும் பரவியது. ஏனெனில் அக்காலத்தில் மூன்று கர்ப்பிணித் தாய்மார்க்கு ஒருவர் வீதமே உயிருடன் குழந்தையைப் பெற்றெடுத்தனர். இந்தப் புதுமைக்குப் பின்னர் ஜெரார்டு மஜெல்லா அவர்களிடம் செபித்த பல கர்ப்பிணித் தாய்மார்க்குச் சுகப்பிரவசமும் கிடைத்தது. இதனால் ஜெரார்டு மஜெல்லா. கர்ப்பிணித் தாய்மாரின் பாதுகாவலர் எனப் போற்றப்படுகிறார்.

வாழும்போதே பல புதுமைகளைச் செய்த ஜெரார்டு மஜெல்லா, காச நோயால் பாதிக்கப்பட்டு கி.பி.1755ம் ஆண்டு அக்டோபர் 16ம் தேதி காலமானார். மகிழ்ச்சியான குழந்தை பிறப்பின் புனிதர் என அழைக்கப்படும் இவர், கி.பி.1904ம் ஆண்டு டிசம்பர் 11ம் தேதி, திருத்தந்தை 10ம் பயஸ் அவர்களால் புனிதராக உயர்த்தப்பட்டார்.

நற்பணி **வே. செங்கோல்மேரி,** காளையார்கோவில்.

(பயணம்: 91) சுமூகமாக இறைச் சமூகமாக




பல நுண்திறன்களை ஒரே ஆலோசனைச் செயல்முறையில் இணைத்துப் பயன்படுத்தும் திறன்களே "பேர்திறன்கள்" (Macro Skills) எனப்படுகின்றன.

ஆலோசனைப் பள்ளி மற்றும் அணுகுமுறைக்கு ஏற்ப Macro Skills-ன் வகைப்பாடு மாறுபடலாம். நடைமுறைப் பயிற்சிக்காக அவற்றை பின்வரும் முக்கிய கட்டங்களாகப் புரிந்துகொள்ளலாம்.

**4.1 உறவு உருவாக்குதல்** - Building the Relationship

ஆலோசனையின் முதல் அடித்தளம் நம்பிக்கை.

**ஆலோசனை பெறுபவர்:**

- நான் இங்கே பாதுகாப்பாக இருக்கிறேனா?
- என்னை விமர்சிப்பார்களா?
- என் ரகசியம் பாதுகாக்கப்படுமா?
- என்னை உண்மையாகப் புரிந்துகொள்வார்களா?

என்று உள்ளார்ந்த முறையில் கேட்கிறார்.

எனவே ஆலோசகர் அனுதாபம் (Empathy), ஏற்றுக்கொள்ளுதல் (Acceptance), மரியாதை (Respect), உண்மைத்தன்மை (Genuineness) ஆகியவற்றை வெளிப்படுத்த வேண்டும்.

**முக்கிய கேள்வி:**

"இந்த நபருக்கு என்னுடன் பேசுவதற்கு பாதுகாப்பான இடத்தை நான் உருவாக்கியுள்ளேனா?"

**4.2 ஆராய்தல்** – Exploration

அடுத்த கட்டம் பிரச்சினையின் வெளிப்புறக் கதையிலிருந்து அதன் உள்ளார்ந்த காரணிகளை நோக்கிச் செல்வதாகும். "என்ன நடந்தது?" என்ற கேள்வியிலிருந்து:

- "அது உங்களை எவ்வாறு பாதித்தது?"
- "அப்போது நீங்கள் என்ன உணர்ந்தீர்கள்?"
- "இந்தச் சூழ்நிலையில் உங்களுக்கு மிகவும் கடினமான பகுதி எது?"
- "இதற்கு முன்பு இதுபோன்ற அனுபவம் இருந்ததா?"

என்று ஆழமாகச் செல்ல வேண்டும்.

**4.3 பிரச்சினையை தெளிவுபடுத்துதல்** – Understanding & Clarification

பல நேரங்களில் ஒருவர் கூறும் "பிரச்சினை" உண்மையான பிரச்சினையாக இருக்காது. "என் கணவருடன் எனக்கு பிரச்சினை" என்பது ஒரு பொதுவான கூற்று.

**ஆலோசகர்:**

"உங்கள் கணவருடன் எந்த வகையான சூழ்நிலைகள் உங்களுக்கு மிகவும் வேதனையாக இருக்கின்றன?" என்று தெளிவுபடுத்தலாம்.

இதன் மூலம் நிகழ்வு, சிந்தனை, உணர்வு, நடத்தை, உறவு மற்றும் தேவைகள் ஆகியவை தனித்தனியாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன.

**4.4 புதிய பார்வையை உருவாக்குதல்** – Insight & Reframing

ஆலோசனையின் முக்கிய நோக்கம் "பிரச்சினையைப் பற்றி பேசுவது" மட்டும் அல்ல; பிரச்சினையைப் பற்றிய புதிய புரிதலை உருவாக்குவது.

"நான் தோல்வியடைந்தவன்" என்று ஒருவர் கூறினால்,

**ஆலோசகர்:**

"நீங்கள் தோல்வியடைந்தவர் என்று சொல்வதைவிட, நீங்கள் சந்தித்த சில முயற்சிகள் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை என்று பார்க்க முடியுமா?" என்று புதிய பார்வைக்கு வழிகாட்டலாம்.

இது உண்மையை மறுப்பதல்ல; ஒரே நிகழ்வை ஒரே கோணத்தில் மட்டும் பார்க்காமல், மாற்று கோணத்தில் பார்க்க உதவுவது.

**4.5 மாற்றத்திற்கான இலக்கை உருவாக்குதல்** – Goal Setting

ஆலோசனை வெறும் உணர்வுப் பகிர்வாக முடிவடையக்கூடாது.

ஆலோசனை பெறுபவர்: "இப்போது நான் என்ன செய்ய முடியும்?" என்ற நிலைக்கு வர வேண்டும்.

**இலக்குகள்:**

- தெளிவானதாக
- நடைமுறைக்கு ஏற்றதாக
- அளவிடக்கூடியதாக
- நபரின் திறனுக்கு ஏற்ப
- அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

ஆலோசகர் இலக்கைத் திணிப்பவர் அல்ல; இலக்கை உருவாக்க உதவுபவர்.

**4.6 செயல்படுத்துதல்** - Action & Change

அறிவு மட்டும் மாற்றத்தை ஏற்படுத்தாது.

Insight → Decision → Action → Practice → Change என்ற பயணம் தேவை.

உதாரணமாக, "எனக்கு கோபம் அதிகம்" என்பதைப் புரிந்துகொள்வது முதல் படி. அடுத்ததாக கோபம் ஏற்படும் சூழ்நிலைகளைப் பதிவு செய்தல், உடல் அறிகுறிகளை கவனித்தல், பதிலளிப்பதற்கு முன் இடைவெளி எடுத்தல், சுவாசப் பயிற்சி, தொடர்பு முறையை மாற்றுதல் போன்ற நடைமுறை முயற்சிகள் தேவைப்படலாம்.

4.7 நிறைவு மற்றும் தொடர்ச்சி – Closure & Follow-up

ஆலோசனை அமர்வின் முடிவும் ஒரு Macro Skill ஆகும்.

அமர்வின் முடிவில்:

- இன்று என்ன புரிந்துகொண்டோம்?
- முக்கியமான உணர்வு என்ன?
- என்ன முடிவு எடுத்தோம்?
- அடுத்ததாக என்ன செய்யப் போகிறோம்?
- மேலும் உதவி தேவையா?

என்பதைச் சுருக்கமாகப் பார்க்க வேண்டும்.

நல்ல நிறைவு என்பது உரையாடலை திடீரென நிறுத்துவது அல்ல; அடுத்த கட்ட மாற்றத்திற்கான பாலத்தை அமைப்பதாகும்.

**6. Macro Skills பயன்படுத்தும்போது கவனிக்க வேண்டியவை**

- எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் பயன்படுத்த வேண்டாம். ஆலோசகர் தன்னிடம் தெரிந்த அனைத்து நுட்பங்களையும் காட்டுவதற்காகப் பயன்படுத்தினால், ஆலோசனை செயற்கையாகிவிடும்.
- அதிகமான கேள்விகள் கேட்க வேண்டாம். அதிகப்படியான கேள்விகள் ஆலோசனையை விசாரணையாக மாற்றிவிடும்.
- உடனடியாக தீர்வு சொல்ல வேண்டாம். ஆலோசகர் "நான் சொல்வதைக் கேள்" என்ற நிலைக்கு சென்றால், ஆலோசனை பெறுபவரின் சுய முடிவெடுக்கும் திறன் குறையலாம்.
- உணர்வுகளைத் தவிர்க்க வேண்டாம். "அதைப் பற்றி கவலைப்படாதீர்கள்" என்பது எளிதான பதில். ஆனால் அது ஒருவரின் உணர்வை நிராகரிக்கக்கூடும்.
- கலாச்சாரப் பின்னணியை மறக்க வேண்டாம். இந்தியச் சூழலில் குடும்பம், திருமணம், சாதி, பொருளாதாரம், கல்வி, மதம், பாலினப் பங்கு, சமூக எதிர்பார்ப்புகள் போன்றவை ஒருவரின் பிரச்சினையில் முக்கிய பங்கு வகிக்கலாம். எனவே ஆலோசகர் கலாச்சார உணர்வுடன் (Cultural Sensitivity) செயல்பட வேண்டும்.

**அசை போட நிமிடம் :**

"ஆலோசனை என்பது பாதுகாப்பான இடம்;
புதியதொரு பார்வை;
பயணிப்பவர் ஆலோசனை பெறுபவரே."

சகோ. S.**ஜான் ஜோ பிரபாகர்.** SHJ.

நற்செய்திப் பணிக்குழுவின்
இணைய தளம் www.arulchandrunilayam.org

## என்னை மன்னியும்

- நீங்கள் ஒருவரையொருவர் பழித்துரைக்க வேண்டாம் : என்ற அறிவுரையை அறிந்தும் பிறரை பழித்துரைத்து. கடுஞ்சொற்களைப் பேசியதற்காக இறைவா! என்னை மன்னியும் (யாக் 4:11)
- உங்களை அடுத்திருப்பவருக்குத் தீர்ப்பளிக்க நீங்கள் யார்? என்ற கேள்வியை மறந்து பிறரின் தனி, குடும்ப மற்றும் ஒழுக்க வாழ்வை தீர்ப்பிட்டதை எண்ணி வருந்துகிறேன், இறைவா! என்னை மன்னியும் (யாக் 4:12)
- நொடிப்பொழுதில் தோன்றி மறையும் புகை போன்றவர்கள் நீங்கள், என்பதை உணராமல் பூவுலகில் நிரந்தரமாய் வாழப் போகிறோம் என்று கருதி ஆணவத்தோடும். பெருமையோடும் வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (யாக் 4:14)
- நன்மை செய்ய ஒருவருக்குத் தெரிந்திருந்தும் அவர். அதைச் செய்யாவிட்டால், அது பாவம் என்பதை அறியாமல். நன்மை செய்யக் கிடைத்த வாய்ப்புகளை சுயநலத்தாலும். பேராசையாலும் தவறவிட்டதை எண்ணி மனம் வருந்துகிறேன். என்னை மன்னியும்.

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

இம் மாத செபக் கருத்து

- மனநலம் பாதிக்கபட்டவர்கள் எதிர்நோக்கும் பாகுபாடுகளை களைய குடும்பங்களும், சிவில் சமூகங்களும், அரசுகளும் முயற்சி மேற்கொள்ள
- மனநலம் சார்ந்த அருள்பணி அகில உலக திருஅவை முழுவதும் முன்னெடுக்கப்பட
- உலகில் போர் நடைபெறும் பகுதிகளில் குறிப்பாக உக்ரைன்-ரஷ்யா மற்றும் ஈராக் பகுதிகளில் அமைதி நிலவ, மக்கள் பாதுகாக்கப்பட
- நல்ல பருவ மழை பெய்து, வேளாண்மை செழிக்க
- இந்தியாவில் மதச்சார்பான்மையும். சனநாயகமும் பாதுகாக்கப்படவும், தேர்தல், நீதி மற்றும் ஊடகத்துறைகள் பாரபட்சமின்றி நேர்மையுடன் செயல்பட

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- கிறிஸ்து மைய வாழ்விலிருந்து விலகிச்செல்ல ஏதுவாகும் பக்தி மற்றும் சடங்குகளைத் தவிர்த்தல்.


கோட்டைக்காடு


அமைதியகம்


புதுக்கோட்டை


சி.கே.மங்கலம்


மணல்மேல்குடி

## அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை


அருள்சான்று நிலையம்


அமைதியகம்

## சீராய்வுக் குழுக் கூட்டம்


செக்காலை


சிவகங்கை

படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **சாலமோனின் நூல் 14-16 அதிகாரங்களுக்குள்**








27.09.2026 அன்று அர்ப்பணம் ஏற்ற புதிய நற்செய்திப் பணியாளர்கள்- முத்துப்பேட்டை

**Narseithi Paniyalar**
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com